# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு


## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

## இலங்கை மத்திய வங்கி

நவெம்பர் 2019
தொகுதி 01 வெளியீடு 07


## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்





2019 நவெம்பரில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 979 மில்லியனுக்கு 0.1 தவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2019 நவெம்பரில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,741 மில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன.

### ஏற்றுமதி, இறக்குமதி வளர்ச்சி வீதம் (%)




2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 0.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் இறக்குமதிச் செலவினம் 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.


### வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொ. மில்.)





2019 நவெம்பரில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018 நவெம்பருடன் ஒப்பிடுகையில் சுருக்கமடைந்தது. அதேவேளை, 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,428 மில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் (சன-நவெ 2019)

### ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்)





### இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் (சன-நவெ)




### ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (சன-நவெ)





2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு, வேளாண்மை மற்றும் கனிமப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் உயர்ந்த கைத்தொழில் ஏற்றுமதிகள் இதற்கு தூண்டுதலாக அமைந்தன.


கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஏற்றுமதித் அளவுச் சுட்டெண் மேம்பட்டது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை அளவு மற்றும் அலகுப் பெறுமதி சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)





### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*






*கொழும்பு ஏல விலைகளை அடிப்படையாகக் கொண்டது


2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, ஒப்பீட்டு ரீதியில் குறைந்த விலைகளின் விளைவாக தேயிலை, வாசனைத் திரவியங்கள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே காரணமாகும். எனினும் தெங்கு, கடலுணவு மற்றும் காய்கறிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இக்காலப்பகுதியில் அதிகரித்தன.

## கைத்தொழில் ஏற்றுமதிகள்












2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் வைரங்கள். இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதிகளில் காணப்பட்ட உயர்ந்த செயலாற்றமே காரணமாகும். எனினும், இக்காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நீர்க்கல எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்தமையே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. 2018இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏற்றுமதி அளவுகள் அதிகரித்தன.

## இறக்குமதிச் செயலாற்றம்






2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளின் மீதும் உறப்பட்ட செலவினம் குறைவடைந்தமையே காரணமாகும்.

# நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி


### நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி





### நுகர்வுப் பொருட்கள் அளவு மற்றும் விலைச் சுட்டெண்கள்




### நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-நவெ)





### சீனி, பருப்பு வகை மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்





2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்குப் பெரும்பாலான வகைகளின், குறிப்பாக தனியாள் ஊர்திகள், அரிசி, சீனி, பாற்பண்ணை உற்பத்திகள், பழ வகைகள் மற்றும் எண்ணெய் மற்றும் கொழுப்பு போன்ற உணவுப்பொருட்களின் தாழ்ந்த இறக்குமதிகளே காரணமாகும். மேலும், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், இறப்பர் உற்பத்திகள் ஆடைகள் மற்றும் அதன் துணைப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்ற உணவல்லா நுகர்வுப் பொருட்களும் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

# இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்


### இடைநிலைப் பொருட்கள் மீதான செலவினம்





### இடைநிலைப் பொருட்களின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றம் (சன-நவெ)




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்தச் சராசரி)





*2018 பெப்புருவரியில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.


2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்குப் பெரும்பாலான வகைகளின், குறிப்பாக தங்கம், எரிபொருள் மற்றும் பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் போன்ற பொருட்களின் தாழ்ந்த இறக்குமதிகளே காரணமாகும். எவ்வாறாயினும், உயர்ந்த ஆடை ஏற்றுமதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்த வேளையில் கனிம உற்பத்திகளின் மீதான செலவினத்தினை அதிகரிப்பதற்கு சீமெந்து ஏனைய கரனைட் கற்களின் இறக்குமதிகள் வழிவகுத்தன.

## முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள்


### முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம்




### முதலீட்டுப் பொருட்களின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றம் (சன-நவெ)




2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு போக்குவரத்துச் சாதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும்.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | நவெ-18 | நவெ-19 | ஆ-ஆ மாற்றம் (%) | சன-நவெ 2018 | சன-நவெ 2019 | ஆ-ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **187.8** | **187.3** | **-0.2** | **2,362.7** | **2,266.5** | **-4.1** |
| இதில் | தேயிலை | 103.2 | 101.5 | -1.7 | 1,311.4 | 1,240.6 | -5.4 |
| | தெங்கு | 20.5 | 22.9 | 11.9 | 287.1 | 307.7 | 7.2 |
| | வாசனைத்திரவியங்கள் | 27.7 | 24.1 | -13.1 | 330.3 | 291.5 | -11.7 |
| | கடலுணவு | 22.3 | 19.0 | -14.6 | 236.6 | 238.6 | 0.8 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **787.9** | **787.6** | **0.0** | **8,444.9** | **8,626.6** | **2.2** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 469.8 | 484.8 | 3.2 | 4,824.3 | 5,113.2 | 6.0 |
| | இறப்பர் உற்பத்திகள் | 71.3 | 60.6 | -15.0 | 798.9 | 793.1 | -0.7 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 56.9 | 56.5 | -0.7 | 569.2 | 465.0 | -18.3 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 33.9 | 34.9 | 3.0 | 423.8 | 410.9 | -3.0 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 37.4 | 28.9 | -22.8 | 401.6 | 370.3 | -7.8 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணம் | 20.3 | 26.9 | 32.1 | 259.1 | 281.4 | 8.6 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 10.8 | 6.2 | -42.4 | 139.0 | 95.4 | -31.4 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **3.9** | **3.8** | **-0.9** | **48.6** | **46.1** | **-5.0** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **979.6** | **978.8** | **-0.1** | **10,856.3** | **10,939.2** | **0.8** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | நவெ-18 | நவெ-19 | ஆ-ஆ மாற்றம் (%) | சன-நவெ 2018 | சன-நவெ 2019 | ஆ-ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **363.5** | **370.4** | **1.9** | **4,622.7** | **3,565.7** | **-22.9** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 111.0 | 140.7 | 26.7 | 1,471.4 | 1,278.9 | -13.1 |
| இதில் | அரிசி | 1.4 | 0.8 | -39.7 | 103.9 | 10.9 | -89.5 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 252.5 | 229.7 | -9.0 | 3,151.2 | 2,286.8 | -27.4 |
| இதில் | தனியாள் வாகனங்கள் | 104.9 | 80.7 | -23.1 | 1,496.2 | 731.7 | -51.1 |
| **இடைநிலைப் புபொருட்கள்** | | **1,074.6** | **992.5** | **-7.6** | **11,504.9** | **10,413.2** | **-9.5** |
| இதில் | எரிபொருள் | 403.6 | 319.6 | -20.8 | 3,834.6 | 3,558.4 | -7.2 |
| | தங்கம் | 0.1 | 0.1 | -0.04 | 438.7 | 2.4 | -99.4 |
| | புடவை மற்றும் புடவைப்பொருட்கள் | 245.7 | 256.9 | 4.5 | 2,617.0 | 2,661.1 | 1.7 |
| | வளமாக்கி | 24.6 | 9.1 | -63.0 | 235.6 | 204.0 | -13.4 |
| | கோதுமை மற்றும் சோளம் | 22.0 | 59.5 | 169.7 | 348.6 | 326.3 | -6.4 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **326.5** | **378.2** | **15.8** | **4,370.6** | **4,174.0** | **-4.5** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 179.5 | 216.2 | 20.5 | 2,291.6 | 2,251.1 | -1.8 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,764.6** | **1,741.1** | **-1.3** | **20,498.1** | **18,152.9** | **-11.4** |

## வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | நவெ-18 | நவெ-19 | ஆ-ஆ மாற்றம் (%) | சன-நவெ 2018 | சன-நவெ 2019 | ஆ-ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -785.1 | -762.3 | - | -9,641.9 | -7,213.6 | - |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (அ)

| விடயம் | | நவெ-18 | நவெ-19 | ஆ-ஆ மாற்றம் (%) | சன-நவெ 2018 | சன-நவெ 2019 | ஆ-ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 136.3 | 136.2 | -0.1 | 137.4 | 138.4 | 0.8 |
| | அளவுச் சுட்டெண் | 125.7 | 140.4 | 11.6 | 133.9 | 144.2 | 7.7 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 108.4 | 97.0 | -10.5 | 102.6 | 96.0 | -6.5 |
| **இறக்குமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 157.9 | 155.8 | -1.3 | 166.8 | 147.7 | -11.4 |
| | அளவுச் சுட்டெண் | 167.3 | 167.8 | 0.3 | 174.4 | 162.6 | -6.8 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 94.4 | 92.9 | -1.7 | 95.6 | 90.9 | -5.0 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 114.8 | 104.5 | -9.0 | 107.3 | 105.6 | -1.6 |

(அ) ஐ.அ.டொ. நியதிகளில்